**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP NO.68/2025**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை –II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பெயர் –திரு.சதீஷ்குமார் PW–1

**3–ம் மற்றும் 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1) விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வண்டி என் அம்மாவிற்கு சொந்தமானது. எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு டிரைவிங் லைசென்ஸ் இல்லை என்று சொன்னால் இருக்கிறது. நான் ஓட்டிச் சென்ற வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் மேற்கிலிருந்து கிழக்காக போனேன் என்றால் ஆமாம். காமராஜர் ரோடு பிரிவு என்பது மூன்று ரோடுகள் சந்திக்கும் இடம் என்று சொன்னால் சரிதான். நான் மேற்கிலிருந்து கிழக்காக வந்து காமராஜ் ரோட்டில் வலது பக்கம் திரும்பும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான்.

Dr.V.Sree Vidya
Date: 2026.08.05 17:33:14 +0530

2) என் மீது கார் வாகனம் மோதியது, பதிவு எண் தெரியாது. லாரி தெற்கிலிருந்து வடக்காக வந்தது என்றும் சொன்னால் சரிதான். தெற்கிலிருந்து வடக்காக வரும் ரோடு தான் மெயின் ரோடு என்றும், கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் ரோடு கிளை ரோடு என்றும் சொன்னால் சரிதான். நான் கிளை ரோட்டில் இருந்து வந்து நின்று பார்த்து கவனமாக செல்லவில்லை என்றும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல.

3) லாரி டிரைவர் மீது போட்ட வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. சேலம் அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்கு சென்றதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம். எனக்கு தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு காலில் எந்த அறுவை சிகிச்சையும் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். 14.04.2024 ஆம் தேதி எனக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பின்பு எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட்டில் எனக்கு ரத்தகட்டும் மற்றும் ரத்தக் சகிவும் தலையில் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றும் சொன்னால் சரிதான்.

4) 16.04.2024 முதல் 28.04.2024 வரையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றும் சொன்னால் ஆமாம். நான்

Dr.V.Sree Vidya
Date: 2026.08.05 17:33:20 +0530

நலமுடன் இருப்பதாக சொல்லித்தான் என்னை வெளியேற்றி இருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரிதான். நான் அதன் பின்பு இரண்டு ஆண்டுகளாக மருத்துவமனைக்கு தொடர் சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எல்.எல்.ஆர் போட்டு இருக்கிறேன்.

5) எனது வயது, வருமானத்தை காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றும், எனக்கு நிரந்தரவு ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. செயல்திறன் ஊனம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya
Date: 2026.08.05 17:33:29 +0530

Chief Judicial Magistrate,
Erode.